## 1.7 வட்டார ஊராட்சி அலுவலகங்களில் சட்டமன்ற பேரவை உறுப்பினர்களுக்கு இட வசதி அளித்தல்

ஊரக வளர்ச்சி (சி1) துறை

அரசாணை (நிலை) எண்.35 நாள் : 31.1.1997

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.659 ஊரக வளர்ச்சித் துறை நாள் 19.08.96
2. அரசு கடித எண்.33984/சி1/90–1 ஊரக வளர்ச்சித் துறை நாள் 18.5.90

**ஆணை**

வட்டார ஊராட்சி அலுவலகங்களில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு இடவசதி அளிப்பது பற்றி அரசு ஆய்வு செய்தது, ஆழ்ந்தப் பரிசீலினைக்குப் பின்னர், வட்டார ஊராட்சி அலுவலகங்களில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக இடவசதி ஏதும் செய்து தர வேண்டியதில்லை. ஆனால், அவர்கள் பொதுமக்களின் குறைகளை நேரில்கேட்பதற்கோ அல்லது மனுக்களைப் பெறுதற்கோ வட்டார ஊராட்சிக் கூட்ட அறையை (Panchayat Union Council Hall) வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என ஆணை வழங்கப்படுகிறது. மேலும் அவ்வாறு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் குறிப்பிடும் நாட்களில், வட்டார வளர்ச்சிக் குழு கூட்டத்தினை இயன்ற வரை தவிர்க்கலாமென்றும் ஆணை வழங்கப்படுகிறது. இவ்வாணை பார்வையிற் காணும் அரசாணைக்கு மாற்றமாக வெளியிடப்படுகிறது.

2. இவ்வரசாணையின் நகலினை, அனைத்து வட்டார ஊராட்சி ஆணையர்கள், கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு தெரிவிக்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்